# வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்

இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான

**கேள்வி அறிவித்தல்** 01.09.2024 – 31.12.2024

கீழ்க்குறிப்பிடப்படும் இறைச்சிக்கடைகளை 2024 ஆம் 01.09.2024 - 31.12.2024 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் சபையினால் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி | : | 02.08.2024 – 15.08.2024 நண்பகல் 12.00 மணி வரை |
| கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி | : | 15.08.2024 வியாழக்கிழமை பி.ப 02.00 மணி வரை |
| கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி | : | 15.08.2024 வியாழக்கிழமை பி.ப 02.00 மணி |
| கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் | : | வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர் |

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் **கேள்வியின் பெயர்** தெளிவாகக் குறிப்பிட்டு மூலப்பிரதியை **"செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்"** என்னும் முகவரிக்கும், இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்" என்னும் முகவரிக்கும் எதிர்வரும் 15.08.2024 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப **02.00** மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

உரிய கட்டணங்களைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| **கேள்வி அறிவித்தல்** 01.09.2024 - 31.12.2024 | | | | |
|---|---|---|---|---|
| **இல** | **விபரம்** | **மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணம்** | **மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம்** | **கேள்வித் தொகை (VAT,NBT நீங்கலாக)** |
| | **அச்சுவேலி உப அலுவலகம் - புதிய கட்டிடம்** | | | |
| 1 | வளலாய் கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 96,000.00 |
| 2 | வளலாய் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 50,000.00 |
| **புத்தூர் உப அலுவலகம் - (சுன்னாகம் வீதி, புத்தூர் - புதிய கட்டிடம்)** | | | | |
| 1 | புத்தூர் கோழி இறைச்சிக்கடை | 1,000.00 | 2,000.00 | 95,000.00 |
| 2 | புத்தூர் மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 581,000.00 |
| 3 | புத்தூர் ஆட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 1,000.00 | 20,000.00 |

1. சந்தையிலிருந்து 1/2 கி.மீற்றர் சுற்றாடலில் இறைச்சி விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.
2. கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையுடன் சமூகமளிக்கும் போது அதன் நிழற்படப்பிரதியையும் பிரதேச கிராம சேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ் அல்லது வதிவிடத்தை உறுதிப்படுத்தக்கூடிய வங்கிக்கணக்கு புத்தகப்பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
3. கேள்விப்படிவக்கட்டணம் கேள்வித்தொகை மாத வாடகை என்பவற்றுக்கு காலத்துக்குக்காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரி செலுத்தப்படவேண்டும். அத்துடன் விலை மதிப்பீட்டுத்திணைக்களத்தினால் மாதாந்த வாடகை மீள்மதிப்பீடு செய்யப்படும் போது மதிப்பீடு செய்யப்படும் தொகை செலுத்தப்படல் வேண்டும்.
4. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்டபின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
5. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வீ கோருபவர்களின் கேள்வி விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
6. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரரோ அவரது ஒரு பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
7. கேள்வி கோரும் ஒவ்வொரு கேள்விப் பத்திரங்களுக்கும் தனித்தனியாக மீளளிக்கப்படாத படிவக் கட்டணமும், மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமும் செலுத்தப்படவேண்டும்.
8. உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை இல 03/2015 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளை பின்பற்றி ஒப்பந்தம் செய்யப்படல் வேண்டும். இது தொடர்பான விபரங்களை கேள்விப்பத்திரங்களை பெறும் போது தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
9. சபையின் அச்சுவேலி கொல்களத்தில் / பிரதேச சபையினால் அனுமதிக்கப்படும் கொல்களத்தில் ஆடு, மாடு இறைச்சிக்கடைகளின் குத்தகைதாரர்கள் பாவனைக்குட்படுத்த அனுமதி வழங்கப்படும். மேலும் கொல்களப்பாவனை தொடர்பில் சபையினது அறிவுறுத்தல்களிற்கு குத்தகைதாரர்கள் கட்டுப்படுதல் வேண்டும். கேள்விகள் சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

இராமலிங்கம் பகீரதன்
செயலாளர்,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர்.
2024.08.02